**01.10.2024**

**O.S.No. 11/2023**

**PW.1 - திரு. சக்திவேல், த/பெ. சரவணன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1ம் வாதி என் தகப்பனார், 3ம் வாதி எனக்கு தங்கை என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி தீர்த்தகிரி என்றால் சரிதான். அவருடைய நிலத்தில் உள்ள தண்ணீர் தொட்டியில் வழக்கமாக என் அம்மா துணி துவைப்பது வழக்கம் என்றால் சரிதான். கடந்த 04.10.2022 அன்று வழக்கம் போல என் அம்மா 5ம் பிரதிவாதி நிலத்திற்கு சென்ற போது, 5ம் பிரதிவாதியின் நிலத்தில் 03.10.2022 அன்று இரவு அவரது நிலத்திற்கு செங்கல், மண் ஆகியவை கொண்டு சென்ற டிராக்டர் மின்கம்பத்தில் மோதி சேதமாகியது என்றால் சரிதான், மின்கம்பி அறுந்துவிழுந்தது. 5ம் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லும் மின்கம்பி அறுந்துவிழுந்தது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி மின்கம்பி அறுந்துவிழுந்திருக்கிறது அதனால் இன்று துணி துவைக்க வரவேண்டாம் என்று என் அம்மாவிடம் சொன்னார் என்றும், அதற்கு என் அம்மா அறுந்து கிடந்த மின்கம்பி பக்கமே செல்லாமல் தொட்டி அருகில் சென்று துவைக்கிறேன் என சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. என் அம்மா அவ்வாறு சொல்லி துணி துவைக்க சென்றிருந்தார் என்றும், அப்போது அவருடன் என் தங்கை சத்யாவின் மகன் கவின் இருந்தார் என்றால் சரிதான். அறுந்துகிடந்த மின்கம்பி அருகே குழந்தை விளையாடி கொண்டிருந்த போது அதை பிடித்துவிட கூடாது என குழந்தையை என் அம்மா பிடிக்க போனார் என்றும், அப்போது குழந்தையை வேறு பக்கம் தள்ளிவிட்டதில் அவர் மின்கம்பி மேல் விழுந்து மின்சாரம் பாய்ந்ததில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதுகுறித்து மின்சார வாரிய ஊழியர்களை விசாரித்த போது ஏற்கனவே அவர்கள் 5ம் பிரதிவாதி தகவல் சொல்லியிருந்ததின் பேரில் லைன்மேன் கனகராஜ் மின்வினியோகத்தை துண்டித்திருந்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் சம்பவத்திற்கு முன்னதாகவே மின்வினியோகத்தை தடை செய்திருந்தார்கள் என்றும், 5ம் பிரதிவாதி அவர் வீட்டிற்காக பயன்படுத்திய UPS லைனில் எர்த் லைன் கொடுக்காததால் மின்சாரம் தாக்கியதில் என் தாயார் இறந்தார் என விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். மின்சாரம் பாய்ந்து என் தாயார் இறந்த சம்பவத்திற்கு இழப்பீடு 5ம் பிரதிவாதியிடம் தான் கேட்க முடியுமே தவிர 1 முதல் 4 பிரதிவாதிகளான அரசு மின்வாரியத்தினரிடம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகளின் செயல்களோ, கவனக்குறைவோ காரணம் இல்லை என்றும், 5ம்

பிரதிவாதி சொன்னதின் பேரில் மின்வினியோகம் உடனடியாக துண்டிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து நான் கொடுத்த புகாரின் பேரில் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குவிமுச பிரிவு 174ன் கீழான நிலைய குற்ற எண். 440/2022–ன் பெயரிலான குற்ற வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து அவர்களிடம் இழப்பீடு கோரியிருப்பது சரியல்ல என்பதால் நாங்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்திருக்கும் இம்மனு 1 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மனுவில் கோரியபடி என் அம்மா மாதம் ரூ.30,000/– வருமானம் பெற்றுவந்தார் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் முன்னிடப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது தன் அம்மா அவரது காலத்தில் 30 ஆடுகள் வைத்திருந்தார் என்றும், அவை மூலம் வருமானம் வந்தது என்றும் சொன்னார். என் அம்மா இறந்த சமயம் என் அப்பா லாரி டிரைவராக இருந்தார் என்றால் சரிதான். நான் அப்போது Engineering Diploma முடித்துவிட்டு ஒசூரில் வேலையில் இருந்தேன் என்றால் சரிதான். என் தங்கைக்கு அப்போது திருமணம் ஆகி அவர் கணவர் வீட்டிலிருந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு முதல் தகவல் அறிக்கையில் என் அம்மா ஆடுகள் மேய்த்து வருமானம் பெற்றுவந்ததாக குறிப்பாக சொல்லப்பட்டிருக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர்களாகிய நாங்கள் மூவரும் தனித்தனியே அவரவர் சொந்த வருமானத்தை வாங்கினோம் என்றும், எங்கள் அம்மாவை பொருளாதார ரீதியாக சார்ந்திருக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.